ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

தபால் பை: 609, வேலூர் – 632 006

# தேவனைத் தேடுவோம்...
# தேசத்தைக் காப்போம்

## ஜெபக்குறிப்புகள்

1. கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் காணப்படும் பெருமை... நிர்விசாரம்... சுயநலம்... ஜெபக்குறைவு... துணிகர பாவங்கள்... தேவ பயமின்மை... போன்ற பாவங்களை அறிக்கையிட்டு... ஜெபிப்போம்!

2. இன்றைய சபைகளிலே காணப்படும் முரட்டாட்டம்... கலகம்... சாதிவெறி... சபை பணத்தை வஞ்சித்தல்... பதவி வெறியாட்டம்... தேர்தல் அருவருப்பு... இவை போன்ற செத்த கிரியைகளினால் நாம் தீட்டானவர்களாயிருக்கிறோம்... தேவன் மன்னித்தருளுமாரு மன்றாடி ஜெபிப்போம்!

3. ஆத்துமா பாரமும்... சுவிசேஷம் சொல்ல வாஞ்சையும்... தேசத்திற்கான கரிசனை ஜெபமும்... இல்லாதவர்களுக்கு இரங்கி உதவுதல்... இவைகள் இல்லாமல் வாழ்ந்துவிட்ட கிறிஸ்தவர்களின் பாவத்தை அறிக்கையிட்டு ஜெபிப்போம்!

4. கிறிஸ்தவ குடும்பங்களில் சிறு சிறு காரியங்களுக்காக விவாகரத்து... சொத்துக்கான வழக்குகள்... பணிபுரியும் இடங்களிலே சாட்சியில்லா வாழ்க்கை... சபைப் பிரிவுகளால் போட்டி மற்றும் சண்டைகள்... இவைகளை தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு ‘இடறலாக’ இருந்தமைக்காக துக்கப்பட்டு ஜெபிப்போம்.

5. நம் தேசத்தில் சாதி, மதம், கட்சி, பதவி, பணம், பாலியல் காணரங்களுக்காக அப்பாவி மனிதர்களின் இரத்தம் பூமியில் சிந்தப்பட்டுள்ளது... இப்பாவத்தினால் உண்டான சாபத்தை தேவன் மன்னிக்கும்படி மன்றாடுவோம்.



6. பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள்... சிறுவர் சிறுமியர்களுக்கு எதிரான அருவருப்புகள்... பரிதானத்தினால் நீதியை புரட்டுதல்... சமூக அநீதி... அதிகார அடக்குமுறை... இவைகளால் தேசம் தீட்டுப்பட்டுள்ளது... தேவன் கிருபையாக தேசத்தை மன்னிக்க மன்றாடுவோம்.




7. கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டு... மருத்துவ சிகிட்சைக்குப்பின் சுகமடைந்த 43 பேருக்காக தேவனைத் துதிப்போம்... நேரடி சிகிட்சை பெறும் 657 பேருக்கும் விரைவில் தெய்வீக சுகம் அளிக்க மன்றாடுவோம்.

8. கொரோனா தொற்று நோயால் இதுவரை மரித்துப்போன (16 பேர்)வர்களின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் தந்துவிட மன்றாடுவோம்... குடும்பத்தாருக்கு தேவையான தைரியம், பண உதவி, புதிய நம்பிக்கை, பிறரது ஒத்தாசை யாவையும் தேவன் கட்டளையிட மன்றாடுவோம்.

9. மத்திய – மாநில அரசுகள் அறிவித்துள்ள 21 நாட்களுக்கான கட்டாய 144 தடை உத்தரவுக்கு... ஒவ்வொரு இந்திய குடிமகனும் தீவிர சுயக்கட்டுப்பாட்டுடன் தம்தம் வீடுகளில் தனிமைப்படுத்திட ஜெபிப்போம்... இதன் மூலம் கொரோனா தொற்று பரவாமல் முற்றிலும் கட்டுப்பட தேவ கிருபைக்காக மன்றாடுவோம்.

10. கொரோனா வைரஸ் தாக்கப்பட்டும்... இன்னும் தீவிர சிகிட்சைக்கு வராதவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு தீவிர சிகிசைட்க் கண்காணிப்பிற்குட்பட ஜெபிப்போம்... சுகம் அடைய மன்றாடுவோம்...

11. தங்கள் உயிரை பணயம் வைத்து தீவிர மருத்துவ சிகிட்சையில் ஈடுபடும் நம் மருத்துவர் கள்... செவிலியர்கள்... மருத்துவ பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியார்களின் அர்ப்பணிப்பு களுக்காக தேவனைத் துதிப்போம்... கொரோனா நோய் தொற்றாதபடி தேவன் அவர்களை பாது காக்கவும்... குடும்பத்தார் ஆசீர்வதிக்கப்படவும் மன்றாடுவோம்.



12. பிரதமர், முதலமைச்சர்கள், சுகாதார அமைச்சர்கள், சுகாதாரம் மற்றும் வருவாய் துறை செயலாளர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், தலைமைச் செயலர்கள், காவல் துறை தலைமை இயக்குநர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானமும்... சரியான முடிவு எடுக்கும் ஆற்றலும்... ஒருங்கிணைந்து செயலாற்றும் திறனும் தந்துவிட... கருத்தாய் ஜெபிப்போம்.

13. 144 தடை உத்தரவு சட்டத்தினால் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உணவு மற்றும் மருத்துவ பாதுகாப்பு கிடைக்கவும்... அடிப்படை வாழ்வாதார தேவைகள் அளிக்கப்படவும் ஜெபிப்போம்.

14. வீட்டை விட்டு தேவையின்றி வெளியே வருவதை தவிர்த்தல்... பிறருடன் நேரடி தொடர்பில் போதிய இடைவெளியை கடைபிடித்தல்... சமூக ஊடகங்களில் எதிர்மறை மற்றும் நிரூபணமாகாத தகவல்களை அனுப்பாதிருத்தல் இவைகளை பொதுமக்கள் கடைபிடிக்க மன்றாடுவோம்.

15. உலகில் கொரோனாவில் பாதிக்கப்பட்டோரில் (5.3 இலட்சம்) பாதி பேர் (2.5 இலட்சம்) அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் நாட்டில் உள்ளனர்... நிலைகுலைந்து நிற்கும் இந்நாடுகளை தேவன் கிருபையாய் இரங்கி தப்புவிக்க மன்றாடுவோம்...

16. இந்தியாவில் ரிசர்வ் வங்கி, மத்திய நிதி அமைச்சகம், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள மக்கள் நலத்திட்டங்கள் நூறு சதவீதம் மக்களுக்கு சென்றடைய கருத்தாய் ஜெபிப்போம்.

17. உலக மக்களையே நடுங்க வைக்கும் இக்கொள்ளை நோயின் கிருமைகளை அழிக்கும் மருந்து கண்டுபிடிக்கப்பட... தேவன் ஞானத்தையும், விவேகத்தையும் அளித்திட ஜெபிப்போம்... மருந்துகள் விரைவாக தயாரிக்கப்பட்டு உலகமெங்கும் விநியோகிக்கப்பட மன்றாடுவோம்.

18. பணித்தளத்தில் தங்கியுள்ள நம் மிஷனரி குடும்பம் கொரோனா நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கப்பட மன்றாடுவோம்... நம் மிஷனரிகளின் குழந்தைகள் தங்கியிருக்கும் விடுதிகளில் கொரோனா தொற்றிற்கு விலக்கி தேவன் பாதுகாத்திட மன்றாடுவோம்.

19. மிஷனரி இயக்கங்களின் பங்காளர்கள்... வீடுகளுக்கு சென்று காணிக்கை சேகரிப்பது பெரும்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது... தேவையான நிதியினை தேவன் சந்தித்துவிட கருத்தாய் மன்றாடுவோம்.

20. G20 நாடுகள் ஒன்றுகூடி கொரோனா தடுப்புப் பணிக்காக 325 இலட்சம் கோடி பணம் ஒதுக்கியுள்ளனர்... மிகப் பெரிய இத்தொகையை மிகச் சரியாக திட்டமிடப்பட்டு... கொள்ளை நோயிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட மன்றாடுவோம்.

21. சமீபத்தில் வெளிநாடுகளிலிருந்து தமிழகம் வந்துள்ள 54000 பேர் கண்டறியப்பட்டு... அவரவர் வீடுகளில் “சிறப்பு கண்காணிப்பு” வலையில் உள்ளனர். இவர்களுக்கு கொரோனா தொற்று கண்டறியப்படவும்... இவர்கள் மூலம் பரவுவதை தடுக்கவும்... பரவியிருந்தால் கண்டுபிடித்து சிகிட்சை அளிக்கவும் கருத்தாக மன்றாடுவோம்.

22. ஒட்டுமொத்த மனுகுலமும் தேவனை நோக்கி கூப்பிடவும்... தம்தம் பொல்லாத வழிகளையும்... தம்தம் கொடுமையைவிட்டு மனந்திரும்புவம் மன்றாடுவோம்... தேவன் வரப்போகும் தீங்கிற்கு மனஸ்தாப்பட்டு... வாதையை நிறுத்திவிடவும்... கதறி ஜெபிப்போம்... தேவாதி தேவன் ஒருவரே மகிமைப்பட மன்றாடுவோம் (யோனா 3:10).

